**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்**
**சென்னை - 600 006**

**ந.க. எண். 49740 / அ4 / இ1 / 2020, நாள். 17.12.2020.**

*****

**பொருள்:** தமிழ்நாடு அமைச்சுப்பணி - திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி, முதன்மைக் கல்வி அலுவலகத்தில் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-IIIஆகப் பணிபுரியம் திருமதி.க.சுதா என்பவருக்கு சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-IIIல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - சார்பு.

**பார்வை:**
1. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 281/அ4/இ1/2019, நாள். 22.02.2019.
2. திருநெல்வேலி, முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண். 4569/அ1/2020, நாள். 10.11.2020.

*****

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி, முதன்மைக் கல்வி அலுவலகத்தில் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-IIIஆகப் பணிபுரியும் திருமதி.க.சுதா என்பவருக்கு சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III பணியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோரிப் பார்வை (2)ல் குறிப்பிட்டுள்ளவாறு கருத்துரு பெறப்பட்டுள்ளன.

மேற்காணும் கருத்துரு பரிசீலனை செய்யப்பட்டு, திருமதி.க.சுதா என்பவர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி IV தேர்வு 2015-16, 2016-17 & 2017-18 மூலம் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III பணிக்குத் தேர்வு செய்யப்பட்டு, பார்வை (1)ல் காணும் செயல்முறைகளின்படி சென்னை-6, மெட்ரிக் பள்ளிகள் இயக்ககத்தில் 28.02.2019 முற்பகல் முதல் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-IIIஆகப் பணிநியமனம் பெற்று, பின்னர், பணிமாறுதலில் தற்போது திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி, முதன்மைக் கல்வி அலுவலகத்தில் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-IIIஆகப் பணிபுரிந்து வருகிறார்.

தனியருக்கு சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யும் பொருட்டு, தனியரின் இடைநிலைக் கல்வி, தட்டச்சு சான்றிதழ்கள் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சு சான்றிதழ்களின் உண்மைத்தன்மை அறிந்து கருத்துருவுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இவ்வுண்மைத் தன்மை அறிக்கையின் அடிப்படையிலும், கீழ்க்காணும் நிபந்தனைகளின் அடிப்படையிலும் சார்ந்த பணியாளருக்கு சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III பதவியில் பணியில் சேர்ந்த நாளான 28.02.2019 முற்பகல் முதல் தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனை) சட்டம் 2016 ன் உட்பிரிவு 28ன் கீழ் பணிவரன்முறை செய்து கீழ்க்காணுமாறு ஆணை வழங்கப்படுகிறது.

//2//

| வ. எண். | பெயர் மற்றும் பதவி திரு. / திருமதி. | நியமன முறை | கல்வித்தகுதி | சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III ஆகப் பணிநியமனம் செய்யப்பட்ட நாள் | சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | க. சுதா சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் | SSLC, Typewriting Tamil / English – Senior Grade Shorthand Tamil Senior Shorthand English Junior Computer on Office Automation | 28.02.2019 முற்பகல் | 28.02.2019 முற்பகல் |

1. சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–III பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் பூர்த்தி செய்த பின்னரே சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–III பதவியில் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும்.
2. பணிவரன்முறை செய்யப்பட்ட இரண்டாண்டு பணிக்காலத்திற்குள் கணினி கல்வித் தகுதியை (Certificate course in Computer on "Office Automation" awarded by the Directorate of Technical Education) தவறாமல் நிறைவு செய்யப்பட வேண்டும்.
3. சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–III பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும்.

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி).

பெறுநர்

சார்ந்த பணியாளர் (உரிய அலுவலர் வழியாக).

**நகல்:** இயக்குநர், மெட்ரிக் பள்ளிகள் இயக்ககம், சென்னை–6.
– அவர்களுக்குப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**நகல்:** முதன்மைக் கல்வி அலுவலர், திருநெல்வேலி.

ந.க. எண்: 4569 / அ1 /2020 நாள் 12-2020

சார்ந்த பணியாளருக்கு பணிவரன்முறை ஆணை சார்பு செய்யப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்
திருநெல்வேலி-9.

பெறுநர்
சார்ந்த பணியாளர்